**IN THE COURT OF THE DISTRICT MUNSIF, SENDAMANGALAM.**

**O.S.No. 73 /2024** **P.W.1**

Deposition of witness for solemnly affirmed by Tr.Rajadurai, Jr.Assistant of this court on 04.11.2025 in accordance with the provision of the Act 1873.

| | |
|---|---|
| Name: | கோபி |
| Father Name: | முத்துசாமி |

**4, 5 பிரதிவாதிகள் தரப்பு குறுக்குவிசாரணை**

நான் என்ன பரிகாரம் கேட்டு இவ்வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால், 2009ம் ஆண்டு கிரைய ஆவணம் செல்லத்தக்கதல்ல என்று உத்தரவிட கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளேன். நான் கிரையம் பெற்ற தாவாசொத்து ஆதியில் கருப்ப கவுண்டர்(எ) கருப்பண்ண கவுண்டருக்கு பாத்தியப்பட்டது என்று சொன்னால் சரிதான். தாவா சொத்தின் சர்வே எண் என்னவென்றால், சர்வே எண் 248/2, 2 ஏக்கர் 18 1/2 செண்ட், ச.எண்.249/9, 86 செண்ட், ச.எண்.252/7ஏ, 75 செண்ட் மற்றும் ச.எண்.252/7சி, 42 செண்ட் ஆகமொத்தம் 3 ஏக்கர் 94 1/2 செண்ட் ஆகும். கருப்பண்ண கவுண்டருக்கு பின்னிட்டு தாவாசொத்து யாருக்கு பாத்தியப்பட்டது என்றால் மேற்படி கருப்பண்ண கவுண்டர் செல்வி என்பவருக்கு உயில் எழுதி வைத்துள்ளார். எனக்கு எப்படி பாத்தியப்பட்டது என்றால் மேற்படி செல்வி என்பவர் 2007ம் வருடத்தில் வீரப்பன் என்பவருக்கு கிரையம் செய்துகொடுத்து பின்னிட்டு வீரப்பன் என்பவரிடமிருந்து நான் கிரையம் பெற்றேன். நான் எந்த வருடத்தில் கிரையம் பெற்றேன் என்றால், 08.08.2024ம் தேதியில் வீரப்பன் வாரிசுகளிடமிருந்து கிரையம் பெற்றேன். இத்தாவா சொத்து குறித்து கருப்பண்ண கவுண்டரின் மனைவி மற்றும் மகள் நாமக்கல் சார்பு நீதிமன்றத்தில் அ.வ.எண்.183/2007 என்று வழக்கு தாக்கல் செய்துள்ள விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். மேற்படி வழக்கானது ஒருதலைபட்சமாக தீர்ப்பாகியுள்ளது. மேற்படி வழக்கின் தீர்ப்புரை மற்றும் தீர்ப்பாணை இவ்வழக்கில் தாக்கல் செய்துள்ளேன். நான் கிரையம் பெற்ற சொத்தை கருப்பண்ண கவுண்டரின் மனைவி மற்றும் மகள், இவ்வழக்கின் 2, 3 பிரதிவாதிகளான பாலசுப்ரமணியன் மற்றும் முருகேசன் ஆகியோர்களுக்கு கிரையம் செய்து கொடுத்த

விவரம் நான் கிரையம் பெற்ற பின்னிட்டுதான் தெரியவந்தது. மேற்படி கிரையத்தை பொறுத்து மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றத்தில் நீதிபேராணை மனு எண் 22026/2024 தாக்கல் செய்துள்ளேன். மேற்படி நீதிப்பேராணை மனுவில் என்ன உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது என்றால், 7 நாட்களுக்குள் பத்திரத்தை பதிவு செய்து கீழமை நீதிமன்றத்தில் பரிகாரம் தேடிக்கொள்ளுமாறு உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருந்தது. மேற்படி உத்தரவின் பேரில்தான் 4ம் பிரதிவாதி எனது கிரையப்பத்திரத்தை பதிவு செய்துள்ளார்கள் என்றால் சரிதான். மேற்படி உத்தரவின் பேரில் நாங்கள் பதிவு செய்துகொடுத்துள்ளதால் நான் பரிகாரம் கோர இயலாது என்று சொன்னால் சரியல்ல.

**மறு விசாரணை – இல்லை.**

Sd/-E.Ridhula Sd/Gobi

DM,SDM.